பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | புரட்டாதி 27 | சனிக்கிழமை | 14.10.2023 | அதிர்வு 74

## ஓய்வுபெற்ற ஆசிரியர் நேற்று சுட்டுக்கொலை

இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று இரவு அனுராத புரம் – இராஜாங்கனை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது. 02▶

# போராடிப் பெற்ற 13ஆம் திருத்த அதிகாரங்களை மழுங்கடிக்காதீர்கள் என வேண்டுகிறார் தவராசா

### ஆளுநரை நேரடியாகச் சுட்டாமல் காட்டமான அறிக்கை



“மாகாண சபையின் அதி காரங்களைத் தங்களது சொந்த நலன்களுக்காக மழுங்கடிக்க விடாது பாதுகாக்க வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.”

– இவ்வாறு பகிரங்க அறிக்கை மூலம் சுட்டிக்காட்டியுள்ளார் என்று வடக்கு மாகாண சபையின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி 03▶



# ஹர்த்தாலை முன்னெடுக்க சகலரும் ஆதரவு தாருங்கள்!

### தமிழ்க் கட்சிகள் பகிரங்க வேண்டுகோள்



(எஸ்.நிதர்ஷன், பிரபாகரன் டிலக்சன்)

“தமிழ்பேசும் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவும், அடக்குமுறைகளைக் கண்டித்தும் எதிர்வரும் 20ஆம் திகதி வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் முன்னெடுக்கப்படவுள்ளது. தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து இந்தக் ஹர்த்தாலைப் பெருமெடுப்பில் மேற்கொள்ளுவதற்கு வடக்கு - கிழக்கில் உள்ள அனைத்துத் தரப்பினருடைய முழுமையான ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.”

- இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். 02▶

# ஹர்த்தால் நடைபெறுவதால் சச்சிக்கு என்ன பிரச்சினை?




### அவர் நேரில் வந்தால் விளக்கம் அளிப்போம் என்று சுரேஷ் பதில்

– எஸ்.நிதர்ஷன் –

ஹர்த்தால் நடைபெறுவதால் சச்சிதானந்தனுக்கு என்ன பிரச்சினையோ தெரியவில்லை என்று தெரிவித்த ஜனநாயகத் 03▶



# ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்க நான் தயார்

### முதுகெலும்பு இருக்கும் வரை அரசியலில் ஈடுபடுவேன் என்று மைத்திரி அறிவிப்பு

“அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுமாறு கோரிக்கைகள் விடுக்கப்படுமானால் அதனை ஏற்பதற்குத் தயாராகவே இருக்கின்றேன்.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் 03▶






‘நீதிபதிக்கு நீதி வேண்டி...!’ என்ற பெயரோடு தமிழ்க் கட்சித் தலைவர்கள் முன்னெடுத்த மனித சங்கிலிப் போராட்டம் உடைந்த சங்கிலித் துண்டுகளாகி விட்டமையால் ‘விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை’ என்று காட்ட நமது தலைவர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்கின்றனர் என்பது வெளிப்படையானது.

மக்களை வீதிக்கு இறக்கிப் போராடச் செய்ய லாயக்கற்றவர்கள் என்ற 02▶

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

உண்மை அம்பலமானதும், அதை மூடி மறைக்க மக்களை வீடுகளுக்குள் இருத்திப் போராட – தங்கள் வேட்டி கசங்காமல் போராட்டம் நடத்த – அவர்கள் காய் நகர்த்துகின்றார்கள் என்ற உண்மையும் அம்பலமாகிவிட்டது.

அதுவும் 'நீதிபதிக்கு நீதி வேண்டி..!' என்ற பெயரில் தாங்கள் முன்னெடுத்த போராட்டக் கோஷம் 'சப்' என்றாகிவிட்டது என்பது அவர்களுக்குப் புரிந்து விட்டது. அதற்காக மக்களைத் தயார் செய்து களத்தில் இறக்கும் ஆதரவுத் தளம் தங்களிடம் அறவே இல்லை என்ற யதார்த்தமும் புரிந்து விட்டது. அதனால் இப்போது புதிய 'லைன்' பிடிக்கின்றார்கள்.

கிழக்கு மாகாணத்தை இதற்குள் இழுக்க, கிழக்கில் இப்போது சூடு பிடித்திருக்கும் – மேய்ச்சல் தரை சூறையாடப்பட்டு கபளீகரம் செய்யப்படும் – பிரச்சினைக்கும் சேர்த்து ஹர்த்தால் என்கின்றார்கள். தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகள், அவர்களுக்கு எதிரான அடக்குமுறைகள், அவற்றுக்கு இலங்கை ஆட்சிப் பீடத்திலிருந்து நீதி கிடைக்காது எனும் யதார்த்தப் புறநிலைமை என்பவற்றைச் சர்வதேசத்திற்கு எடுத்துக்காட்டுவதற்கும் இந்தக் கடையடைப்பு என்று புது டியூன் போடுகிறார்கள்.

தாங்கள் முன்வைத்த கடையடைப்பு போராட்டத்தை எப்பாடு பட்டாவது நடத்தி, மனித சங்கிலிப் போராட்டத்தின் மூலம் மக்கள் கொடுத்த உதையைச் சமாளிக்கத் துடியாய்த் துடிக்கின்றார்கள் அவர்கள் என்பது தெளிவு.

இந்த ஹர்த்தால் அறிவிப்பு தமிழரசுக்குள் கலாட்டாவை ஏற்படுத்தியிருப்பதாக நேற்று சுட்டிக் காட்டியிருந்தேன். நேற்று மாலை நடைபெற்ற தமிழ்க் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தமிழரசினர் மிஸ்ஸிங். கட்சித் தலைவர் மாவையும் இல்லை, அவர் சார்பில் 'உடையார் வீட்டுப் பொல்லுப்போல பிரசன்னமாகும்' அவரது மகனும் காணப்படவில்லை. ஏன் என்பதும் தெரியவில்லை. தமிழ்க் கட்சிகளின் இந்த நகர்விலிருந்து மெல்ல மாவையர் 'ஜாகா' வாங்கி விட்டாரோ தெரியவில்லை. அடிக்கடி 'ஒற்றுமை','ஒற்றுமை' என்று பேசி தனது எஞ்சிய கால அரசியலுக்கு அந்த ஒற்றுமைக் கோஷத்தை மட்டுமே மூல(/ப்)தனமாக நம்பி இருக்கும் மாவை, இப்படி ஜாகா வாங்கினாலும் கூட அதைப் பகிரங்கமாக அறிவிக்க மாட்டார். அதற்கும் அவருக்குத் திராணி இருக்காது என்றே நினைக்கிறேன். இவ்விவகாரத்தில் ஒதுங்குவது என்றாலும், மெல்லச் சத்தமின்றி, அம்சடக்காக அமைதியாகி விடுவார். அவ்வளவுதான் நடக்கும்.

நேற்று மாலை தமிழ்க் கட்சிகளின் கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட தகவலில், இந்தப் போராட்டம் குறித்து வன்னியில் செல்வம் அடைக்கலநாதனுடனும், கிழக்கில் ஜனா கருணாகரனுடனும் பேசப்பட்டதாகவே தகவல் கூறப்பட்டது. கிழக்கில் தமிழரசின் எம்.பிக்கள் மூவர் இருந்தும் அவர்களுடன் பேசினோம், ஆராய்ந்தோம் என்று எந்தத் தகவலும் முன்வைக்கப்படவில்லை. சில சமயங்களில், தமிழரசின் சிரேஷ்ட துணைத் தலைவர் பொன்.செல்வராஜா நேற்றுக் காலையில் காலமாகியிருக்கின்றமையால், இச்சமயத்தில் கிழக்கில் தமிழரசினருடன் பேச முடியவில்லை என்ற சூழலும் இருந்திருக்கலாம்.

நவராத்திரி சமயத்தில் இரண்டாம் தவணைப் பரீட்சையை நடத்தும் விடயம் குறித்து நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அந்நாள்களில் காலையில் ஒரு மணி நேரம் பாடசாலைகளில் நவராத்திரி வழிபாடுகளை நடத்துவதற்காகப் பரீட்சைகளைத் தினசரி தாமதப்படுத்தும் 'சமாளிப்பு' நடவடிக்கையைக் கல்வி நிர்வாகம் எடுத்திருப்பது தெரிந்ததே. ஆனால், இரண்டாம் தவணைப் பரீட்சை நடக்கும் இருபதாம் திகதிதான் நமது தமிழ்க் கட்சிகள் தமிழ் மக்களின் நிலைப்பாட்டை 'சர்வதேசத்திற்கு காட்டுவதற்காக'(?) ஹர்த்தால் அனுஷ்டிக்கும் முடிவை எடுத்திருக்கின்றன. பாவம் நம் மாணவர்கள். பரீட்சையைக் கோட்டை விட்டுவிட்டு விட்டத்தைப் பார்க்க வேண்டியதுதான் – நமது தமிழ்த் தலைவர்களின் புண்ணியத்தில்....!

## ஹர்த்தாலை முன்னெடுக்க

(முதலாம் பக்கத் தொட...)

தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படவுள்ள இந்தக் ஹர்த்தால் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடல் நாடாளுமன்ற உறுப்பினர்சி.வி.விக்னேஸ்வரன் யாழ். இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்றது. இதன் போது ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

"தமிழ் மக்களுக்கான நீதி என்பது தொடர்ந்து மறுதலிக்கப்படுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டியும், சிங்கள பௌத்த மக்கள் வாழாத தமிழ், முஸ்லிம் மக்கள் வசிக்கும் பிரதேசங்களில் தொடர்ச்சியாகக் காணிகள் அபகரிக்கப்பட்டு அங்கு பௌத்த கோயில்கள் நிறுவுவதற்கான வேலைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன என்பதைக் கண்டித்தும், நிறுத்தக் கோரியும், மட்டக்களப்பு – மயிலத்தமடு மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்குத் தீர்வு கோரியும் எதிர்வரும் 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஹர்த்தால் நடைபெறவுள்ளது.

இங்கிருந்து தொலைபேசி மூலமாக மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரனுடனும் (ஜனா), வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனுடனும் கலந்துரையாடியுள்ளோம். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஹர்த்தால் தொடர்பான அடுத்த கட்டம் நடவடிக்கை தொடர்பாகவும் ஆராயவுள்ளோம்.

இங்கிருந்து கிழக்கு மாகாணத்துக்குச் சென்று அவர்களை உற்சாகப்படுத்தும் நோக்கில் பல்வேறு தரப்பினருடனும் சந்திப்புக்களை மேற்கொள்வதற்கும் தீர்மானித்துள்ளோம்.

எதிர்வரும் 20 ஆம் திகதி வடக்கு – கிழக்கில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் இணைந்து இந்தக் ஹர்த்தாலைப் பெருமெடுப்பில் மேற்கொள்ளுவதற்கு வடக்கு – கிழக்கில் உள்ள அனைத்துத் தரப்பினருடைய முழுமையான ஆதரவை வேண்டி நிற்கின்றோம்.

தமிழ் மக்களுடைய பிரச்சினைகளை அரசு வெறுமனே பார்வையாளர்களாகவே பார்க்கின்றது. இந்த எண்ணத்தை மாற்றியமைக்கும் முகமாக ஒட்டுமொத்தமாகத் தமிழ் முஸ்லிம் மக்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தும் முகமாகவே இந்தக் ஹர்த்தால் கடைப்பிடிக்கப்படவுள்ளது.

நீதிபதி சரவணராஜாவுக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல், அவர் நாட்டை விட்டு வெளியேறியமை வெறுமனே ஒரு நீதிபதிக்கான அச்சுறுத்தலாகப் பார்க்க முடியாது. மக்களுக்கான நீதித்துறை என்பது எவ்வளவு தூரம் இந்தச் சிங்கள அரசாலும் அரச இயந்திரத்தாலும் அவமதிக்கப்படுகின்றது என்ற விடயத்தையே எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு எதிராகவே குற்றப் புலனாய்வுப் பிரிவின் அறிக்கைகள் காலாகாலமாக வெளிவந்துள்ளன. அதுபோல்தான் நீதிபதி சரவணராஜா பற்றிய அறிக்கையும் முற்றிலும் பொய்யானதாகவே இருக்கும். சரியான விசாரணையை அவர்கள் செய்திருக்க மாட்டார்கள் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகின்றோம். இந்த அறிக்கையை நாங்கள் ஒரு பொருட்டாகவே எடுக்கவில்லை.

மேலும், தமிழ்க் கட்சிகள் இணைந்து இந்தியப் பிரதமருக்குக் கடிதம் அனுப்பவுள்ளன. தற்போது தமிழ் மக்கள் எதிர்நோக்கும பிரச்சினைகள் தொடர்பாகவும் கொழும்பில் இருக்கக்கூடிய இராஜதந்திரிகளுக்கும் கடிதங்கள் அனுப்பப்படவுள்ளன. இது தொடர்பான நடவடிக்கைகளை அடுத்தடுத்த தினங்களில் மேற்கொள்ளவுள்ளோம்." – என்றார்.

நேற்று நடைபெற்ற ஹர்த்தால் தொடர்பான முன்னாயத்த கலந்துரையாடலில் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், தமிழீழ விடுதலைக் கழகத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.ஸ்ரீகாந்தா, தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன், ரெலோவின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் தியாகராஜா நிரோஷ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## ஓய்வுபெற்ற ஆசிரியர்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நான்கு பிள்ளைகளின் தந்தையான எம்.ரி. மாரப்பன (வயது 62) என்பவரே இதன்போது உயிரிழந்துள்ளார்.

இவர் ஓய்வுபெற்ற ஆசிரியர் என்று சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம், பிரேத பரிசோதனைக்காக இராஜாங்கனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## போராடிப் பெற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பி.எஸ்.எம். சார்ள்ஸைப் பெயர் குறிப்பிடாமல் அவரது நடவடிக்கைகளைச் சாடும் விதத்தில் அமைந்த அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:-

"வடக்கின் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதியால் வடக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்க் கட்சிகளுடன் மூன்று தடவைகள் நடைபெற்ற கலந்துரையாடலிலும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது (பொலிஸ் அதிகாரம் தவிர) தொடர்பாக ஜனாதிபதியால் முன்மொழியப்பட்டு கலந்துரையாடப்பட்டது. 13 ஆவது திருத்தச் சட்டம் ஏற்புடையது அல்ல, அது தமிழ் மக்களின் தீர்வாக அமையாது என்று கூக்குரல் இட்ட பல கட்சிகள் இன்று 13 முழுமையாக அமுல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளமை மட்டுமல்ல இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குக் கூட இது தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்திருக்கின்றன.

இவ்வாறு பலராலும் இன்று 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே எமது அரசியல் நோக்கை அடைவதற்கான நடைமுறைச் சாத்தியமான முதற்படி என விளங்கிக் கொண்டிருக்கும் வேளையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை மழுங்கடிக்கும் வகையில் ஆளுகையின் செயற்பாடுகள் சில அமைந்திருக்கின்றன.

நேரடியாக விடயத்துக்கு வருவதானால், அண்மையில் மத்திய சுகாதார அமைச்சால் யாழ். போதனா வைத்திய சாலை பணிப்பாளராகக் கடமை புரியும் வைத்தியர் அவரது பதவிக்கு மேலதிகமாக மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதனை ஏற்றுக்கொள்ளாமல் விடுவதற்கு ஆளுநருக்கு முழுமையான அதிகாரம் உண்டு. இது முற்றிலும் பிழையான ஒரு முன்னுதாரணம் மட்டுமல்ல, இதற்கு இடம் விட்டுக் கொடுக்கப்படுமேயானால் மத்தியின் கீழ் செயற்படுகின்ற ஏனைய சேவைகளைச் சேர்ந்தவர்களும் இதே போல் மத்தியின் அதிகாரிகளாக இருக்கும் அதேவேளையில் மாகாண சபையின் நிர்வாக அதிகாரிகளாகவும் நியமிக்கப்படலாம். இது மாகாண சபை முறைமையை முற்றாகவே மத்தியமயமாக்கும் ஒரு செயற்பாடாகும்.

மாகாண சபை முறைமை என்பது எத்தனையோ இயக்கங்களைச் சேர்ந்த போராளிகளின் அர்ப்பணிப்பின் விளைவாக ஏற்படுத்தப்பட்ட இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் ஊடாக கிடைக்கப்பெற்ற ஒன்றாகும். மாகாண சபை முறைமை அமுலுக்கு வந்ததிலிருந்து படிப்படியாக மாகாண சபையின் அதிகாரங்கள் மத்தியமாக்கப்பட்ட சூழலில் இன்று 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுலாக்குவதற்கான சூழல் ஏற்பட்டுள்ளது. ஆனால், இவ்வாறான நியமனங்களும் அதனைக் கண்டு கொள்ளாமல் இருக்கும் ஆளுகைகளும் போராளிகளின் தியாகங்களால் ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையைத் தங்களது சொந்த நலன்களுக்காக மழுங்கடிக்க விடாது நிலைநாட்ட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

வடக்கு மாகாண சபையால் நிறைவேற்றப்பட்ட சுகாதார நியதிச் சட்டத்தின் பிரிவு 5(1)ன் பிரகாரம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி என்பது மாகாண சபைக்குரிய விடயமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இந்த நியதிச் சட்டம் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாகாணங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகார வரம்புக்கு அமைவாக வடக்கு மாகாண சபையால் நிறைவேற்றப்பட்டது. மேலும், இந்த நியதிச்சட்டம் அமுலுக்கு வந்த 23.02.2016 ஆம் திகதியிலிருந்து (ஆளுநர் நியதிச் சட்டத்தில் ஒப்பமிட்ட திகதி) மத்தியில் சுகாதார சேவைகள் சட்டம் வடக்கு மாகாணத்தில் செல்லுபடியாகாது. அது மட்டுமல்ல அந்தத் திகதியிலிருந்து மத்தியில் சுகாதார சேவைகள் சட்டமோ அல்லது அதன் தத்துவத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட சுற்றறிக்கைகள், வழிகாட்டல்கள், உப விதிகள் எதுவுமோ இந்தச் சேவையைக் கட்டுப்படுத்தாது. இது தொடர்பாக அன்றைய சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளரால் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் அபிப்பிராயம் கோரியதற்கு, எமது நியதிச் சட்டத்திற்கு முரணான மத்திய சுகாதார சேவையின் தத்துவத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட எவ்வித சுற்றறிக்கைகளும் ஏனையவைகளும் செல்லுபடியற்றன என சட்டமா அதிபர் திணைக்களத்தினால் அறிவுறுத்தப்பட்டது.

மாகாண சபைகள் ஏற்படுத்தப்பட்ட பின் மாகாண சபைகளுக்கான விடயப் பரப்புகளுக்குரிய மாகாண சேவைகளை ஆரம்பிப்பதற்கு தத்துவம் உண்டு. இருந்தும் உயர் பதவியை வகிப்பவர்கள் முழு நாட்டிலும் சேவை செய்யக் கூடிய அனுபவங்களைப் பெற்றவராக இருக்க வேண்டும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் அனைத்து இலங்கை சேவையைச் சேர்ந்த நிர்வாக சேவை, கணக்காளர் சேவை, இயந்திரவியலாளர் சேவை, விஞ்ஞான சேவை, கல்வி நிர்வாக சேவை, திட்டமிடல் சேவை, விவசாய சேவை, கால்நடை வளர்ப்பு சேவை, மருத்துவ சேவை போன்ற சேவையைச் சேர்ந்தவர்கள் மத்தியால் மாகாணங்களுக்கு விடுவிப்பதற்கான இணங்கப்பாடு காணப்பட்டது. அவ்வாறு விடுவிக்கப்பட்டவர்களை மாகாணங்களில் பதவியில் நியமிப்பது என்பது ஆளுநரையும் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவையும் சார்ந்தது.

இன்று மருத்துவ சேவையைத் தவிர்ந்த மேலே குறிப்பிடப்பட்ட சகல உத்தியோகத்தர்களினதும் இட நியமனம் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினாலே கையாளப்படுகின்றது. ஆனால், மருத்துவ சேவையைச் சேர்ந்தவர்களை மட்டும் இதுவரை மத்திய அமைச்சு மாகாணத்துக்கு விடுவிப்பதோடு நின்றுவிடாமல் அவர்களது இட நியமனத்தையும் செய்து வந்துள்ளது. இது முழுக்க முழுக்க அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கும் மாகாண சபை சட்ட மூலத்துக்கும் முரண்பாடான செயலாகும். இவ்வாறான நியமனங்கள் அரசமைப்புக்கும் மாகாண சபைகள் சட்டத்துக்கும் முரண்பாடாக இருக்கலாகாது என்பதற்காக அவ்வாறு இட நியமனம் பெற்றவர்களுக்கு ஆளுநர்கள் மீளவும் நியமனங்கள் வழங்குவது நடைமுறையாக வந்துள்ளது. ஆனால், ஆளுநர் அவ்வாறு நியமனம் வழங்க மறுப்பாராயின் மத்தியால் வழங்கப்பட்ட நியமனம் செல்லுபடியற்றது என்பது கவனத்தில் கொள்ள வேண்டும்.

அன்றைய இணைந்த வடக்கு கிழக்கில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஆட்சி இருந்த காலத்தில் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரால் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமிக்கப்பட்டார். அதேவேளை மத்தியும் ஒருவரை நியமிக்க முற்பட்டது. மத்தியின் நியமனத்தை புறக்கணித்து மாகாண சபை தங்களது நியமனத்தை செய்திருந்தது. அதேபோல் முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக மருத்துவர் திலீபனை மத்திய அமைச்சு நியமித்த போதும் அதனை எதிர்த்து வடக்கு மாகாண சபை தீர்மானித்ததன் அடிப்படையில் மத்திய அமைச்சு அவரது நியமனத்தை மீளப்பெற்றுக் கொண்டது. ஆதலினால் இந்த விடயத்தில் மத்திய அமைச்சு நியமனங்களை செய்தாலும் அதனை மறுதலிப்பதற்கு அல்லது மீளப் பெறும் வண்ணம் கோரிக்கை விடுவதற்கு மாகாண சபைக்கு அல்லது அதன் பிரதான நிறைவேற்று செயற்பாட்டாளரான ஆளுநருக்கு முழு உரிமையும் உண்டு என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.

இதனைக் கருத்தில்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் கால் நூற்றாண்டுக்கு மேலான அர்ப்பணிப்பிலான போராட்டத்தின் விளைவாகப் பெற்ற 13ஆவது திருத்தச் சட்டத்தின் அதிகாரங்களைப் பேணிப் பாதுகாப்பதற்கு முன்வருவார்கள் என எதிர்பார்க்கின்றேன்." - என்றுள்ளது.

## ஜனாதிபதித் தேர்தலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"2015 இல் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றேன். எனினும், எனக்குத் தேவையானவற்றைச் செய்வதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக இருந்தாலும் நாடாளுமன்றத்தின் அதிகாரம் இல்லாவிட்டால் உரிய வகையில் செயற்பட முடியாது.

எனது கொள்கை ரீதியிலான அரசியலை முன்னெடுக்கவே நாடாளுமன்றத் தேர்தலில்கூட போட்டியிட்டேன். முதுகெலும்பு இருக்கும் வரை அரசியலில் ஈடுபடுவேன்." - என்றார்.

## ஹர்த்தால் நடைபெறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அவர் நேரில் வந்து எங்களுடன் பேசினால் அவருக்கு இதைப் பற்றி விளங்கப்படுத்தலாம் என்றும் கூறினார்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து எதிர்வரும் 20ஆம் திகதி வடக்கு - கிழக்கு தழுவிய ரீதியில் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ளன. இந்நிலையில் ஹர்த்தால் அறிவிப்பை உடன் மீளப் பெறுங்கள் என இலங்கை சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தன் ஊடக அறிக்கையொன்றின் மூலமாக நேற்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

# பல்கலை விரிவுரையாளர்கள் சம்மேளனம் ஜனாதிபதியுடன் நேற்று முக்கிய சந்திப்பு

## பல விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்துக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கல்விசார் ஆய்வுகளுக்கான கொடுப்பனவுகளை அதிகரித்துக்கொள்ளல் மற்றும் வருமானம் ஈட்டும் போது அறவிடப்படும் வரியிலிருந்து விடுவித்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் அரசு அறிந்துள்ளது எனவும், பொருளாதார பிரச்சினைகளை விரைவில் தீர்த்து அனைத்து மக்களுக்கும் நிவாரணம் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கம் எனவும் இதன்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

மேற்படி கல்வி ஆய்வுகளுக்கான கொடுப்பனவை அதிகரிப்பதற்குத் தற்போதுள்ள சுற்று நிருபங்கள் ஊடாக போதிய ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை என்றும், தற்போதுள்ள வரி விதிப்புக்களிலிருந்து விடுப்பதற்கான சுற்று நிருபமொன்றை வெளியிடுவதற்கான இயலுமை தொடர்பில் தேடியறிந்து 3 வாரங்களுக்கு தனக்கு அறிக்கையொன்றைச்சமர்ப்பிக்கவேண்டும்என்றும்அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவை இரத்துச் செய்து பல்கலைக்கழக நிர்வாகச் செயற்பாடுகளை கலிபோர்னியா மற்றும் பீஜிங் பல்கலைக்கழக முறைமைகளுக்கமைய தயாரிப்பதற்கான இயலுமை தொடர்பிலான





ஆய்வொன்றை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி பரண ஜயவர்தன, செயலாளர் கலாநிதி அதுலசிறி சமரகோன் உட்பட சம்மேளத்தின் உறுப்பினர்கள் பலரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

## வீட்டில் குப்பை கொளுத்திய போது

# தீக்காயங்களுக்குள்ளான 4 பிள்ளைகளின் தாய் சாவு

– எஸ்.நிதர்ஷன் –

வீட்டில் குப்பை கொளுத்திய போது எதிர்பாராத வகையில் ஆடையில் பற்றி எரிந்த தீயினால் காயமடைந்த பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

யாழ்., சங்கத்தானை, சாவகச்சேரியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான சுகந்தன் தயாபரி (வயது 37) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

கடந்த 7ஆம் திகதி பிற்பகல் 5 மணியளவில் வீட்டில் இருந்த குப்பையை மண்ணெண்ணெய் ஊற்றி கொளுத்திய போது அவரது ஆடையில் தீப்பற்றியுள்ளது. காற்று வீசும் திசையில் நின்று இவ்வாறு குப்பைக்குத் தீ மூட்டியமையே இதற்குக் காரணம் எனத் தெரியவந்துள்ளது.

இதையடுத்து சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த அவர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

அங்கு சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்று பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவருக்கு மூன்று ஆண் பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளையும் உள்ளனர். கடைசிப் பிள்ளைக்கு 2 வயது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தமரணம்தொடர்பில்யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசரணைகளை மேற்கொண்டு பிரதே பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

# அத்துரலியே தேரரின் எம்.பி. பதவி தப்பியது

'அபே ஜனபல'கட்சியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலியே ரத்தன தேரரை நீக்கும் கட்சியின் தீர்மானம் சட்டரீதியானது அல்ல என உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்துள்ளது.

இந்த உயர் நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக வண.அத்துரலியே ரத்தன தேரர் கட்சி உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டாலும் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவார். அதற்கு அவருக்கு எந்தச் சட்டத் தடையும் இல்லை.

ஒழுக்காற்றுக் குழுவின் கூறப்பட்ட தீர்மானத்தின் பேரில் மனுதாரரை 'அபே ஜனபல' கட்சி அமைப்பின் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கும் முடிவு சட்ட விரோதமானது என உயர்நீதிமன்ற நீதியரசர்கள் புவனேகா அலுவிஹாரே, முர்து பெர்னாண்டோ மற்றும் ஜனக் டி சில்வா ஆகியோர் அடங்கிய அமர்வு தீர்ப்பளித்துள்ளது. .

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்சீவ ஜயவர்தன மற்றும் ருக்ஷான்சேனாதீர ஆஜராகியிருந்தனர். அபே ஜனபல கட்சி சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஃபர்மன் காசிம் முன்னிலையானார்.

நான்காவது பிரதிவாதி சார்பில் தேசர குணதிலக்கவுடன் சட்டத்தரணி நில்சாந்த சிறிமான்ன ஆஜரானார். சட்டமா அதிபர் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் அவந்தி பெரேரா ஆஜரானார்.

# 17 வயதுச் சிறுமி மீது துஷ்பிரயோகம் மன்னாரில் மூன்று இளைஞர்கள் கைது

(மன்னார் நிருபர்)

மன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள கிராமம் ஒன்றில் 17 வயதுடைய சிறுமி ஒருவர் மூன்று நபர்களால் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மூவரும் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் பெரிய கமம் பகுதியை சேர்ந்த 23,18,17 வயதுடைய இளைஞர்கள் மூவர் மேற்படி சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று நபர்களும் சிறுமியின் நிர்வாணப் படத்தை வைத்திருந்தமையோடு அந்தப் படத்தை நண்பர்களிடமும் பரிமாறிக் கொண்டுள்ளனர்.

அப்படங்களை வைத்து சிறுமியை மிரட்டி துஷ்பிரயோக சம்பவத்தில் ஈடுபட்டு இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

அதே நேரம் சம்பவத்தின் பிரதான குற்றவாளியாக சந்தேகிக்கப்படும் வாகன திருத்தகம் ஒன்றில் பணிபுரியும் 23 வயதுடைய நபர் சிறுமியை துஷ்பிரயோகம் செய்தமையுடன் அவரிடம் இருந்து 2 ஆயிரம் ரூபாய் பணத்தையும் வலுக்கட்டாயமாக அபகரித்து சென்றுள்ளார்.



இந்த நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமி மற்றும் அவரின் தாயார் மன்னார் பொலிஸ் நிலையத்தில் மேற்கொண்ட முறைப்பாட்டின் அடிப்படையில் மன்னார் பொலிஸார் சந்தேக நபர்கள் மூவரையும் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர். மூவரும் மன்னார் நீதுவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது மூவரையும் எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதுவான் உத்தரவிட்டார்.

# ரூ. 400 பெறுமதி களவை விசாரிக்க ரூ.2 கோடி 75 லட்சம் செலவிட்டனர்

## ‘கோப்’ குழு முன் விவரம் அம்பலம்

வெறும் 400 ரூபா மதிப்பிலான இரண்டு கிலோ மிளகு திருடப்பட்டமை தொடர்பான வழக்கும் விசாரணைக்கும் இரண்டு கோடி 75 லட்சம் ரூபா செலவழிக்கப்பட்ட சம்பவத்தை பொது நிறுவனங்களுக்கான நாடாளுமன்ற குழு (‘கோப்’ குழு) வெளிப்படுத்தியிருக்கின்றது.

எல்கடுவ தோட்ட நிர்வாகத்தில் இது இடம்பெற்றிருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக நாடாளுமன்ற ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் எம்.பி.க்கள் வினவியபோது நிறுவனத்தின் அதிகாரிகள் அதனை ‘கோப்’ குழு முன்னிலையில் ஒப்புக்கொண்டனர்.

இவ்வளவு விலை கொடுத்து, இது தொடர்பாக வழக்கு தொடர்ந்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என ‘கோப்’ குழு முடிவு செய்தது. நிறுவனத்தின் பணிப்பாளர் சபை ‘கோப்’ முன்னிலையில் அழைக்கப்படவுள்ளது.



+ பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்
+ நிகழ்நிலை காப்புச் சட்டமூலம்

# இரண்டு சட்டமூலங்களும் சுதந்திரத்தைப் பாதிக்கும்

## ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகம் ஆட்சேபம்

இலங்கை அரசாங்கம் பரிசீலித்து வரும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் (இணையக் காப்பு சட்டமூலம்) ஆகியன தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கவனம் செலுத்தியுள்ளது.

இந்த இரண்டு உத்தேச சட்டமூலங்கள் ஊடாகவும் அதிகாரிகளுக்கு விரிவான அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன எனவும் இந்தச் சட்டமூலங்கள் சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு ஏற்புடையவையாக இல்லை என்றும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளுக்கான ஆணையகத்தின் ஊடகப்பேச்சாளர் ராவின் ஷம்டாசனி தெரிவித்துள்ளார்.

உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம், நிகழ்நிலை காப்புச் சட்டமூலங்கள் ஆகியன் கருத்துச் சுதந்திரம், அமைதியாக ஒன்றுகூடுவதற்கான உரிமைகளை மட்டுப்படுத்துகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதம் தொடர்பான வரையறை நீதித்துறையின் போதிய மேற்பார்வையின்றி தனி நபர்களை விசாரணை செய்வதற்கும், காண்காணிப்பதற்கும், தடுத்து வைப்பதற்கும் பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் பரந்த அதிகாரங்களை வழங்குகிறது என மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணையாளர் அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்தில் உள்ள பல சரத்துகள் தெளிவில்லாமலும் வரையறுக்கப்படாமலும் உள்ளன என மனித உரிமைகளுக்கான ஐ.நா. ஆணையாளர் அலுவலகத்தின் ஊடகப்பேச்சாளர் ராவின் ஷம்டாசனி தெரிவித்துள்ளார்.

இதனால் இது சுதந்திரத்தை பாதிக்கும் என்பதுடன், சட்டபூர்வமான வெளிப்பாடுகளையும் குற்றமாகக் காண்பதாக மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஊடகப் பேச்சாளர் ராவின் ஷம்டாசனி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

UNHRC

# மனைவியைக் கொடூரமாக வெட்டிக் கொன்ற கணவன்

பொலன்னறுவை, அரலகங்வில பிரதேசத்தில் மனைவியைக் கொடூரமாக வெட்டிப் படுகொலை செய்த கணவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

உறங்கிக் கொண்டிருந்த மனைவியை கணவன் கொடூரமாகக் கொலை செய்துள்ளார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

49 வயதுடைய அசோக வாசல குமாரி என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கணவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குடும்பத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# திருமண நிகழ்வில் மோதல் கத்திக் குத்தில் ஒருவர் பலி

மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட விலிம்புல பிரதேசத்தில் திருமண நிகழ்வொன்றின்போது 59 வயதுடைய நபர் ஒருவர் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டுள்ளார் என மல்வத்துஹிரிபிட்டிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விலிம்புலவில் வசித்து வந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மாகம்மனகே சிறிமேவன் என்பவரே கத்திக்குத்துத் தாக்குதலில் படுகாயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விலிம்புலவில் உள்ள வீடு ஒன்றில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்ற திருமண நிகழ்வின் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவருக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒருவருக்கும் இடையில் இடம்பெற்ற மோதல் காரணமாகவே கத்திக்குத்து இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# பொலிஸ் நிலையத்துக்குள் தன் மீதே தீ வைத்த பெண்!

ஹப்புத்தளை பொலிஸ் நிலையத்துக்குள் தன் மீது தீ வைத்துக் கொண்ட பெண் ஒருவர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஹப்புத்தளை பொலிஸ் நிலையத்தின் மலசலக்கூடத்தில் வைத்து அவர் தன் மீதே தீ வைத்துக் கொண்டார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் காயமடைந்த பெண் தியத்தலாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## எதேச்சாதிகார வழியில் அரசு

கடந்த காலத்தில், நாட்டில் நீடித்த எதேச்சாதிகார ஆட்சி முறைமையே நாட்டின் இந்தப்பெரு வீழ்ச்சி நிலைமைக்குக் காரணம் என்பது துலாம்பரமான உண்மை.

ஊழல், மோசடி, பொதுச் சொத்துக்களைச் சூறையாடுதல், மோசமான நிர்வாகம் போன்றவையே நாட்டின் இன்றைய இழிநிலைக்கு வழி செய்தன என்பது சகல தரப்பினராலும் கண்டறியப்பட்டு உரைக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கேடுகெட்ட நிர்வாக முறைமைக்குள் நாடு சிக்கியமைக்கு ஜனநாயகத்தின் பெயரால் கோலோச்சிய எதேச்சாதிகாரம்தான் முக்கிய - பிரதான - காரணம்.

இந்தப் பெரு வீழ்ச்சியிலிருந்து நாடு முழுமையாக மீளுவதாயின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் மட்டுமல்ல, நிர்வாகத்தில் பொருளாதார ஒழுக்கமும் மிக முக்கியமானது என்பதை இந்த நெருக்கடியில் இருந்து நாடு மீண்டெழுவதற்குக் கை கொடுத்து உதவ முன்வந்திருக்கும் சர்வதேச நாணய நிதியம் வரை சகல தரப்புக்களுமே சுட்டிக்காட்டியாகிவிட்டது.

சர்வதேச நாணய நிதியம், உதவும் நாடுகள் உட்பட சகல சர்வதேசத் தரப்புகளிடமும் மீளெழுச்சிக்காகக் கையேந்தி நிற்கும் இலங்கை நாடும், அதன் அரசும், அரசு தலைமையும், பொருளாதார ஒழுக்கத்தைப் பேணி, ஒழுங்கு முறைகளைப் பின்பற்றி, சரியான - வெளிப்படையான - நிர்வாகத்தை நடைமுறைப் படுத்த கட்டுக்கோப்பான - பொருத்தமான - இறுக்கமான - நடவடிக்கைகளை எடுப்பனவாகத் தெரியவில்லை. இதுவே இலங்கையின் இன்றைய துரதிஷ்ட நிலைமையாகும்.

ஒழுக்க முறையான ஆட்சி நிர்வாகத்தைக் கொண்டு வருவதானால், முதலில் எதேச்சாதிகார ஆட்சி முறைமை மாற்றப்பட வேண்டும். தனி நபர்களுக்கு அதிகாரங்களை வாரி வழங்கி, கணக்கு வழக்கின்றி அவற்றைப் பிரயோகிக்கும் நடைமுறைகள் கட்டுப் படுத்தப்பட வேண்டும்.

மொத்தத்தில் எதேச்சாதிகார ஆட்சி முறைகளைக் களைந்து, ஜனநாயகப் பண்புகள், விழுமியங்கள் கொண்ட ஆட்சி நிர்வாக முறைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் குறித்துப் பெரிதாகப் பீற்றிக் கொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும், அவரது அரசும் இது விடயத்தில் எதேச்சாதிகாரத்தைக் கைவிடும் தரப்புகளாகத் தெரிய வில்லை. நிறைவேற்றதிகாரத்தோடு மேலும் மேலும் எதேச்சாதிகார ஆட்சி முறைமையை முன்னெடுப் பதிலேயே ஆட்சித் தலைவரும் அவரது அரசும் தீவிர நிலைப்பாட்டை பிரதிபலிக்கின்றனர். ரணிலின் அரசு புதிதாகக் கொண்டு வரப் பிரேரித்திருக்கும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலமும், நிகழ் நிலை காப்புச் சட்டமூலமும் இத்தகைய எதேச்சாதிகாரப் போக்கை நோக்கிய நகர்வுகளே என்பதை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகமே வெளிப்படையாகக் காரண காரியங்கள் மற்றும் விளக்கங்களோடு சுட்டிக்காட்டியாகிவிட்டது.

எதேச்சாதிகாரப் போக்கை ஜனாதிபதி ரணிலின் அரசு கைவிடும் வரை இந்த நாட்டுக்கு பொருளாதார மீட்சி என்பது சாத்தியமே இல்லை.

# இலங்கையின் கடன்களை மறுசீரமைக்க முன்மொழிவு

### தனியார் கடன் வழங்குநர்கள் சமர்ப்பிப்பு

இலங்கைக்குக் கடன் வழங்கியுள்ள தனியார் கடன் வழங்குநர்கள் 12 பில்லியன் (1200 கோடி) அமெரிக்க டொலர் கடனை மறுசீரமைப்பது தொடர்பிலான முன் மொழிவை சமர்ப்பித்துள்ளனர்.

எதிர்கால பொருளாதார அழுத்தங்களை குறைப்பதற் காக புதிய பிணை முறி பத்திரங்களை விநியோகிப்பதன் மூலம் கடனை தீர்க்கும் முறை தொடர்பில் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என ரொயிட்டர் செய்தி வெளி யிட்டுள்ளது.

லண்டனிலிருந்து ரொயிட்டர் செய்திச்சேவையால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு அமைய, தனியார் கடன் வழங்குநர்கள் இந்த முன்மொழிவை கடந்த ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி சமர்ப்பித்துள்ளனர்.

கடன், வட்டியின் அளவைக் குறைத்தல் உள்ளிட்ட பல விடயங்கள் இதன்போது பரிசீலிக்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்கால பொருளாதார அழுத்தத்தின் போது கடனை செலுத்துவதை இலகுபடுத்தும் Macro Linked Bonds (MLBs) எனும் பெயரிலான புதிய பிணை முறைமை குறித்தும் இந்த முன்மொழிவில் உள்ளடக்கப் பட்டுள்ளது.

இதனிடையே, தனியார் கடன் வழங்குநர்கள், திட்ட மொன்றை சமர்ப்பித்திருந்தால், அதனை பரசீலிப்பது இலங்கை அதிகாரிகள் மற்றும் ஆலோசகர்களின் கடமை என சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய பசுபிக் பிராந்திய திணைக்களத்தின் பணிப்பாளர் கிருஷ்ணா ஸ்ரீனிவாசன் குறிப்பிட்டுள்ளார்.

# வடக்கு இஸ்ரேலில் தங்கியுள்ள இலங்கையருக்கு எச்சரிக்கை!



இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையிலான யுத்தம் அதிகரித்து வருகின்றது. இதன் காரணமாக மத்திய கிழக்கு நாட்டின் வடக்குப் பகுதிகளில் உள்ள இலங்கையர்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் எனவும் அவசரகால அறிவுறுத்தல்களை முறையாகப் பின்பற்று வேண்டும் என்றும் இஸ்ரேலில் உள்ள இலங்கைத் தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

லெபனான் மற்றும் சிரியாவின் எல்லைகளுக்கு அருகாமையில் அமைந்துள்ள நஹாரியா, அக்கோ, ஹைஃபா, திபெரியாஸ் மற்றும் நசரேத் நகரங்கள் தற்போது தாக்குதல் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன என இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், மேற்குறிப்பிட்ட வடக்கு நகரங்களில் உள்ள இலங்கையர்கள், மருந்துகள் மற்றும் உணவு உள்ளிட்ட அன்றாடத் தேவைகளை கையிருப்பில் வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், இஸ்ரேலிய அரசாங்கம் இந்த பகுதிகளில் துருப்புக்களை அனுப்பியுள்ளது மற்றும் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது என்று தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேலின் இராணுவம் காசாவின் வடபகுதியில் வசிக்கும் மக்கள் தென்பகுதி நோக்கி 24 மணி நேரத்திற்குள் இடம்பெயரவேண்டும் என உத்தரவிட்டுள்ளது.

இஸ்ரேலிய இராணுவம் அத்தகைய உத்தரவை உறுதிப்படுத்தாத போதிலும், இது வரவிருக்கும் தரைவழித் தாக்குதலைக் குறிக்கும் என்று கூறப்பட்டது.

# மனிதகுலத்துக்கு எதிரானது பயங்கரவாதம்: மனிதநேய அணுகுமுறையே தேவை!

## - பி 20 உச்சி மாநாட்டில் பிரதமர் மோடி உரை



ஜனநாயகத்தின் தாயாகவும், உலகின் மிகப் பெரிய ஜனநாயகமாகவும் இந்தியா திகழ்கிறது என பிரதமர் மோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

மேலும், பயங்கரவாதம், அது எங்கு நடந்தாலும் அல்லது எந்த காரணத்திற்காக இருந்தாலும், அது மனிதகுலத்திற்கு எதிரானது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜி 20 நாடாளுமன்ற சபாநாயகர்களின் 9 ஆவது உச்சிமாநாடு புது டில்லியில் உள்ள யசோபூமியில் நேற்று தொடங்கியது. பி 20 என்று அழைக்கப்படும் இந்த மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கிவைத்தார். இந்த மாநாட்டில் ஜி20 நாடுகளைச் சேர்ந்த நாடாளுமன்ற சபாநாயகர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பங்கேற்றனர்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, பி20 உச்சி மாநாடு உலகம் முழுவதும் உள்ள நாடாளுமன்ற நடைமுறைகளின் மகாகும்ப மேளாவைப் போன்று உள்ளது.

இந்தியா நிலவில் தரையிறங்கி உள்ளது. அதேபோல், ஜி 20 உச்சிமாநாட்டை வெற்றிகரமாக நடத்தி உள்ளது. அதன் தொடர்ச்சியாக இன்று பி20 உச்சிமாநாடு தொடங்கப்பட்டுள்ளது.

உலகின் மிகப் பெரிய ஜனநாயகத்தைச் சேர்ந்த மக்களின் சக்திதான் இந்த மாநாட்டிற்கு மிக முக்கிய காரணம். 9 ஆவது பி20 மாநாடு இந்தியாவில் நடைபெறுவது பெருமைக்குரிய ஒன்று. இந்தியா ஜனநாயகத்தின் தாய். அதோடு, உலகின் மிகப் பெரிய ஜனநாயகம். விவாதிப்பதற்கும், கலந்துரையாடுவதற்கும் ஏற்ற இடமாக உலகம் முழுவதும் உள்ள நாடாளுமன்றங்கள் திகழ்கின்றன.

பயங்கரவாதம், அது எங்கு நடந்தாலும் அல்லது எந்த காரணத்திற்காக இருந்தாலும், அது மனிதகுலத்திற்கு எதிரானது. பயங்கரவாதக் குழுக்கள் மாற்றுப் பாதையில் மனித நேய அணுகுமுறையுடன் முன்னேற வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

# 'ஒபரேஷன் அஜய்' திட்டத்தின் மூலம் இஸ்ரேலில் இருந்து தமிழகத்தைச் சேர்ந்த 21 பேர் தாயகம் திரும்பினர்

'ஒபரேஷன் அஜய்' திட்டத்தின் மூலம் வந்த விமானத்தில் முதற்கட்டமாக 214 பேர் இந்தியர்கள் வந்துள்ளனர். இந்த 214 பேரில் 21 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். 21 பேரும் பத்திரமாக மீட்கப்பட்டு தமிழகத்தை வந்தடைந்துள்ளனர்.

இவர்களில் 14 பேர் சென்னை விமான நிலையத்துக்கும், 7 பேர் கோவை விமான நிலையத்துக்கும் வந்துள்ளனர் என்று தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். இதன்போது அவர் தெரிவிக்கையில்,

இஸ்ரேல் – பாலஸ்தீனம் ஆகிய நாடுகளுக்கு இடையே போர் தற்போது தீவிரமடைந்து வரும் நிலையில், தமிழர்கள் பலர் தாயகம் திரும்ப முடியாமல் அங்கே சிக்கித் தவித்து வருகின்றனர்.

தமிழக முதல்வரின் வேண்டுகோளினை ஏற்று அங்கிருப்பவர்களை மீட்கும் பணியில் மத்திய அரசும் தற்போது இணைந்து செயலாற்றிக்



கொண்டிருக்கிறது. தமிழக அரசின் அயலக தமிழர் நலத்துறை பல்வேறு வாட்ஸ்அப் குழுக்களை உருவாக்கி, அங்குள்ள தகவல்களை தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

இந்தநிலையில், இஸ்ரேல் நாட்டில் சிக்கி தவித்த தமிழர்களில் தாயகம் திரும்புவதற்காக பதிவு செய்த நபர்களில் கோவை, திருவள்ளூர், கடலூர், திருச்சி, தேனி, கரூர், விருதுநகர், நாமக்கல், புதுக்கோட்டை, காஞ்சிபுரம், சென்னை முதலிய மாவட்டங்களைச் சேர்ந்த 21 தமிழர்கள் மத்திய அரசின் 'ஒபரேஷன் அஜய்' திட்டத்தின் மூலம் முதற்கட்டமாக வந்தடைந்தனர்.

இஸ்ரேலில் ஒட்டுமொத்தமாக தமிழகத்தைச் சேர்ந்த 114 பேர் இருக்கின்றனர் என அயலகத்தமிழர் துறையின் சார்பில் கண்டறியப்பட்டுள்ளது. எஞ்சியிருப்பவர்களுடன் அயலகத் தமிழர் துறையின் ஆணையர் தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறார். எனவே அவர்கள் அனைவரையும் மீட்கும் முயற்சி தமிழக அரசின் சார்பில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# 24 மணி நேரத்தில் 11 லட்சம் மக்கள் காசாவிலிருந்து வெளியேற வேண்டும்!

## இஸ்ரேல் எச்சரிக்கை; ஹமாஸ் நிராகரிப்பு



காசாவின் வடக்குப் பகுதியில் இருந்து 11 லட்சம் மக்களை வெளியேற்றும்படி ஐ.நா. மூலம் இஸ்ரேல் விடுத்த எச்சரிக்கையை ஹமாஸ் நிராகரித்துள்ளது.

ஹமாஸ் நடத்திய ஏவுகணை தாக்குதலுக்கு 7 ஆவது நாளை கடந்து இஸ்ரேல் பதிலடி கொடுத்து வருகிறது. பேரழிவின் பிடியில் காசா இருக்கிறது. இஸ்ரேல் தாக்குதலில் காசாவில் இதுவரை 1500 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இவர்களில் 500 பேர் குழந்தைகள் என காசா சுகாதார அமைச்சகம் உறுதி செய்துள்ளது.

இஸ்ரேல் தரப்பில் இதுவரை 1200 பேர் உயிரிழந்துள்ளனர். இஸ்ரேல், காசா என இரு தரப்பிலும் சேர்த்து 2800 இற்கும் மேற்பட்ட உயிர்கள் பலியான சூழலில், காசாவின் வடக்குப் பகுதியில் இருந்து 11 லட்சம் மக்களை வெளியேற்றும்படி ஐ.நா. மூலம் ஹமாஸ் குழுவுக்கு இஸ்ரேல் வலியுறுத்தியுள்ளது.

24 மணி நேரத்தில் 11 லட்சம் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்படாவிட்டால் தரைவழித் தாக்குதலில் மோசமாக பேரழிவை சந்திக்க வேண்டியிருக்கும் என இஸ்ரேல் எச்சரித்தது.

காசா நகரில் வசிக்கும் மக்கள், நகரின் தெற்கு பகுதியில் உள்ள கடற்கரை பகுதிகளுக்கு தப்பிச் செல்ல வேண்டும் என்றும் அந்த எச்சரிக்கையில் சொல்லப்பட்டுள்ளதாகவும், ஹமாஸ் தீவிரவாதிகள் காசா நகருக்கு அடியில் உள்ள சுரங்கப் பாதைகளில் பதுங்கியிருப்பதாக வெளிவந்த தகவலின் அடிப்படையில் அவர்களை குறிவைத்து தாக்க ஏதுவாக இஸ்ரேல் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

மேலும், இந்த வெளியேற்றம் உங்கள் சொந்த பாதுகாப்புக்காக என காசா மக்களிடம் எச்சரிக்கையாக தெரிவிக்கும்படி இஸ்ரேலிய இராணுவம் கூறியதாக ஐ.நா. செய்தித் தொடர்பாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்துள்ளார்.

ஆனால், ஹமாஸ் இந்த எச்சரிக்கையை நிராகரித்துள்ளது. காசாவில் இருந்து மக்கள் வெளியேற மாட்டார்கள் என்று ஹமாஸ் தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனிய மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி தெற்கு பகுதிக்கோ அல்லது எகிப்துக்கோ தப்பிச் செல்ல வேண்டும் என மிரட்டல்கள் வந்துள்ளன. எங்கள் பாலஸ்தீனிய மக்கள் ஆக்கிரமிப்பு தலைவர்களின் மிரட்டல்களை நிராகரிக்கின்றனர்.

எங்கள் நிலத்திலும், எங்கள் வீடுகளிலும், எங்கள் நகரங்களிலும் வசிப்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். இதில் இருந்து இடம் பெயர்வது என்பது நடக்காது என இஸ்ரேலின் எச்சரிக்கையை ஹமாஸ் நிராகரித்துள்ளது.

அதேநேரம், 24 மணி நேரத்தில் 11 லட்சம் மக்கள் வெளியேற வேண்டும் என்ற இஸ்ரேலின் உத்தரவு, பேரழிவுக்கான சூழ்நிலை என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

ஐ.நா. மூலம் மட்டுமில்லாமல், ட்ரோன்கள் மூலமும் காசா மக்களுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்துள்ளது. ட்ரோன்களில் பேப்பர் துண்டுகள் கொண்டு காசா நகரைவிட்டு வெளியேற மக்களுக்கு இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்தது என செய்தியாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். உங்கள் வீடுகளை உடனடியாக காலி செய்து தெற்கே செல்லுங்கள் என ட்ரோன்கள் மூலம் வெளியிடப்பட்ட எச்சரிக்கை குறிப்பில் சொல்லப்பட்டுள்ளது.

இதேவேளை, காசாவுக்கு மனிதாபிமான உதவிகளை உலக நாடுகள் வழங்க வேண்டும் என பலஸ்தீன சுகாதார அமைச்சர் மை அல்-கைலா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இஸ்ரேலால் முற்றுகையிடப்பட்ட பாலஸ்தீன பகுதிக்கு மருத்துவ மற்றும் அவசர உதவிகளை உடனடியாக வழங்க உலக நாடுகள் மற்றும் மனித உரிமை குழுக்கள் முன்வர வேண்டும்.

காசா பகுதியின் மிகப்பெரிய மருத்துவமனையான அல்-ஷிஃபாவில் இன்னும் இரண்டு நாட்களுக்கு மட்டுமே மின்சாரம் தயாரிக்க போதுமான எரிபொருள் மட்டுமே உள்ளது. நாங்கள் மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# வேறு முனைகளில் போர் வெடிக்கும்: ஈரான் எச்சரிக்கை



காசா மீதான தாக்குதலை இஸ்ரேல் நிறுத்தாவிட்டால் வேறு முனைகளில் மோதல்கள் வெடிக்கலாம், போர் ஏற்படலாம் என ஈரான் எச்சரித்துள்ளது.

ஈரான் வெளியுறவு அமைச்சர் ஹொசைன் அமிராதொலை ஹியான நேற்று முன்தினம் இரவு லெபனான் தலைநகர் பெய்ரூட் சென்றார். அவருக்கு ஹமாஸ் மற்றும் பாலஸ்தீன இஸ்லாமிக் ஜிகாத் அமைப் புகளின் பிரதிநிதிகள் வரவேற்பு நல்கினர். லெபனான் அதிகாரிகளும் வர வேற்றனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், காசாவை ஆக்கிரமிக்கும் இஸ்ரேல் அங்கே போர்க் குற்றங்களை நிகழ்த்திவருகிறது. இது வேறு சில பகுதிகளில் மோதல்கள் வெடிக்கத் தூண்டும். வேறு போர் முனைகளை உருவாக்கும். இதைத் தடுப்பது இஸ்ரேலின் கைகளில்தான் உள்ளது. இஸ்ரேல் உடனடியாக காசா மீதான தாக்குதலை நிறுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்.



# நியூஸிலாந்துக்கு ‘ஹட்ரிக்’ வெற்றி

## புள்ளிப்பட்டியலில் மீண்டும் முதலிடம்

சென்னையில் நேற்று நடைபெற்ற உலகக் கிண்ண லீக் ஆட்டமொன்றில் நியூஸிலாந்து அணி 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

13ஆவது உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடைபெற்று வருகின்றது.

இதில், நேற்று சென்னையில் நடைபெற்ற பகல் – இரவு ஆட்டத்தில் நியூஸிலாந்து – பங்களாதேஷ் அணிகள் களம் கண்டன.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்கு, மிஸ்பிகுர் ரஹ்மான் (66), ஷாகிப் அல் ஹசன் (40), மஹமுதுல்லா (41 – ஆட்டமிழக்காமல்) ஆகியோரின் சிறப்பான ஆட்டம் கைகொடுக்க 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 245 ஓட்டங்களைச் சேர்த்தது.

நியூஸிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், கூடுதலான விக்கெட்டுகளை லக்கி பெர்கியூசன் (3) சாய்த்தார்.

பின்னர் 246 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கு நோக்கிக் களமிறங்கிய நியூஸிலாந்து அணி, 12 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ரஷின் ரவிந்திராவை (9) பறிகொடுத்தது.

எனினும், பின்னர் சுதாகரித்து ஆடி ஓட்டங்களைச் சேர்த்தது.


அந்த அணியின் டேவொன் கொன்வே (45), கனே வில்லியம்சன் (78 – உபாதையால் வெளியேறினார்), டாரில் மிச்செல் (89 – ஆட்டமிழக்காமல்), கிளென் பிலிப்ஸ் (16 – ஆட்டமிழக்காமல்) ஆகியோரின் பொறுப்பான ஆட்டம் கைகொடுக்க, 42.5 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து, 248 ஓட்டங்களைச் சேர்த்தது.

இதன்மூலம் அந்த அணி 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது.

ஆட்டநாயகனாக நியூஸிலாந்தின் லக்கி பெர்கியூசன் தெரிவானார்.

நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் நியூஸிலாந்து அணி மூன்றாவது வெற்றியைப் பெற்றுள்ளது. இதன்படி அந்த அணி மொத்தமாக 6 புள்ளிகளைப் பெற்று புள்ளிப்பட்டியலில் மீண்டும் முதலிடத்தைப் பிடித்தது.

இன்று இந்தியா – பாகிஸ்தான் மோதும் ஆட்டம் நடைபெறவுள்ளது.



### உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | நியூஸிலாந்து | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.604 |
| 02 | தென்னாபிரிக்கா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 2.360 |
| 03 | இந்தியா | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 1.500 |
| 04 | பாகிஸ்தான் | 2 | 2 | 0 | 0 | 0 | 4 | 0.927 |
| 05 | இங்கிலாந்து | 2 | 1 | 1 | 0 | 0 | 2 | 0.553 |
| 06 | பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.699 |
| 07 | இலங்கை | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.161 |
| 08 | நெதர்லாந்து | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.800 |
| 09 | அவுஸ்திரேலியா | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.846 |
| 10 | ஆப்கானிஸ்தான் | 2 | 0 | 2 | 0 | 0 | 0 | -1.907 |

குறிப்பு: போ–போட்டி, வெ–வெற்றி, தோ–தோல்வி, மு.அ.–முடிவு அற்றது, பு–புள்ளி, ஓ.ச.–ஓட்ட சராசரி




# பிரிஸ்பேர்ணை கடைசி ஓவரில் மடக்கி சம்பியனானது கல்பனா விளையாட்டுக் கழகம்




(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

பிரிஸ்பேர்ண் விளையாட்டுக் கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற B25 வெற்றிக் கிண்ணத்தை மருதமுனை கல்பனா விளையாட்டுக் கழகம் வென்றெடுத்தது.

கழக முன்னாள் வீரர் மர்ஹூம் ஷஹீத் ஞாபகார்த்தமாக பிரிஸ் பேர்ண் விளையாட்டு கழகத்தின் 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டுக்கழகமைதானத்தில்மென் பந்துக் கிரிக்கெட் தொடர் நடைபெற்றது.

அணிக்கு பதினோரு பேர் கொண்ட ஏழு ஓவர்கள் கிரிக்கெட் தொடராக நடைபெற்ற இத்தொடரின் இறுதிப்போட்டிக்கு மருதமுனை பிரிஸ்பேர்ண், கல்பனா விளையாட்டுக் கழகங்கள் தெரிவாகி யிருந்தன.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கல்பனா விளையாட்டுக்கழகம் 7 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 46 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பிரிஸ்பேர்ண் அணி, இறுதி ஓவரின் இறுதி 2 பந்துகளில் 9 ஓட்டங்கள் பெற வேண்டும் என்ற இக்கட்டான சூழலில், ஒரே ஒரு சிக்ஸர் அடித்து ஆறு ஓட்டங்களையே பெற்றது.

இதனால், கல்பனா விளையாட்டு கழகம் ஓர் ஓட்டத்தால் வெற்றிபெற்று B25 சம்பியன் கிண்ணத்தை தன்வசப் படுத்தியது.

சம்பியன் அணிக்கு வெற்றிக் கிண்ணம் மற்றும் 30 ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இரண்டாம் இடத்தைப் பெற்ற பிரிஸ்பேர்ண் அணிக்கு கிண்ணம் மற்றும் 20 ஆயிரம் ரூபா பணப்பரிசு வழங்கிவைக்கப்பட்டது.

அதேபோல, மூன்றாமிடத்தைப் பிடித்த மிமா அணிக்கு கிண்ணம் மற்றும் பத்தாயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது.





# 5 நாடுகளில் இருந்து இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச விசா

## அமைச்சரவை அனுமதி

ஐந்து நாடுகளில் இருந்து இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு இலவச விசாவை வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

சீனா, ரஷ்யா, இந்தியா, தாய்லாந்து, இந்தோனேசியா ஆகிய நாடுகளின் பிரஜைகளிடம் விசாவிற்கான கட்டணத்தை அறவிடவேண்டாமென உத்தரவிடப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்கும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.




# அரச பொறியியல் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு விருப்ப ஓய்வு இழப்பீடு வழங்குவதற்கு அனுமதி

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்கு விருப்ப ஓய்வு இழப்பீடு வழங்க அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படும் நிர்மாணப் பணிகள் பொருளாதார நெருக்கடியால் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இதனால் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அதன் தலைவர் ரட்ணசிறி களுபஹன தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், திணைக்களத்தின் 1500 இற்கும் அதிகமான ஊழியர்கள் ஓய்வு பெற முன்வந்துள்ளனர் என அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், அவர்களுக்கான ஓய்வூதியம் மற்றும் இழப்பீடுகளை வழங்குவதற்கான நிதி திறைசேரியால் அனுமதிக்கப்படாததால், திணைக்களம் கடந்த சில மாதங்களாக நெருக்கடியைச் சந்தித்தது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், ஓய்வூதியம் வழங்குவதற்காக அரசாங்கம் 3,764 மில்லியன் ரூபாவை அனுமதித்துள்ளது என திணைக்களத்தின் தலைவர் ரத்னசிறி களுபஹன அறிவித்துள்ளார்.

அரச பொறியியல் கூட்டுத்தாபனம் தற்போது கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதில்லை எனவும், பராமரிப்பு சேவைகள், வழிகாட்டல் மற்றும் முன்னர் ஒப்பந்தம் செய்யப்பட்ட சீமெந்து உற்பத்திப் பணிகளில் மாத்திரமே ஈடுபடுகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



# இஸ்ரேலில் இருவரைத் தவிர இலங்கையர் பாதிக்கப்பட்ட சம்பவம் பதிவாகவில்லை!

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தகவல்

இஸ்ரேலில் காணாமற்போன இருவரைத் தவிர வேறு எந்த இலங்கையருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்பட்ட சம்பவம் இதுவரைப் பதிவாகவில்லை என வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப்பேச்சாளர் காமினி செனரத் யாப்பா நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இதனை தெரிவித்தார்.

காஸா தவிர்ந்த ஏனைய பகுதிகளில் மக்கள் இயல்பாக வாழ்ந்து வருகின்றனர் என அங்குள்ள இலங்கை தூதரக தகவல்கள் தெரிவிக்கின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

போரில் பாதிக்கப்படும் இலங்கையர்களுக்கு உதவிகளை உடனடியாக வழங்கத் தேவையான நிதியை வழங்குமாறு இஸ்ரேலில் உள்ள இலங்கை தூதரகத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டது என காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.

அதன்படி, 10,000 அமெரிக்க டெ-ாலரை அவசர தேவைகளுக்காக வழங்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்..

அத்துடன், நாடு திரும்ப விரும்பும் இலங்கையர்களுக்காக வணிக விமான சேவைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப் படுகின்றன என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தூதரக அறிக்கைகளின் அடிப்படையில், விமான பயணக் கட்டணங்கள் கணிசமாக உயர்வடைந்துள்ளன எனவும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்துள்ளார்.



# இன்று சூரியகிரகணம்

2012 ஆம் ஆண்டுக்கு பின்னர் இன்று சூரிய கிரகணம் தோன்றவுள்ளது.

2012 ஆம் ஆண்டுக்கு பின்னர் தற்போது தோன்றவுள்ள சூரிய கிரகணத்தின் வளையம் பெரியதாக இருக்கும் என வானியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

இன்று சனிக்கிழமை ஏற்படவுள்ள இந்நிழ்வை அமெரிக்காவில் எளிதாக பார்க்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இந்த அரிய காட்சியை பார்க்கும் வாய்ப்பு குறைவாகக் காணப்படும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



# ஜனாதிபதியின் கீழ் வந்துள்ள சுற்றாடல் அமைச்சர் பதவி

நஸீர் அஹமட் வகித்து வந்த சுற்றாடல் அமைச்சர் பதவி ஜனாதிபதியின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சுத் தமது பொறுப்பின் கீழ் கொண்டுவரப்பட வேண்டுமென தீர்மானித்து, ஜனாதிபதி வழங்கிய உத்தரவுக்கமைய ஜனாதிபதியின் செயலாளரால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினராக இருந்த நஸீர் அஹமட், கட்சியின் நிலைப்பாட்டுக்கு முரணாக அமைச்சுப் பதவியை பெற்றதனால், கட்சியின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட்டார்.

இதற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட போதிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தீர்மானம் சட்டபூர்வமானதென உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இதனால் நஸீர் அஹமட் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் இன்னும் மண் சரிவு அபாயம் நீடிப்பு



மண்சரிவினால் தடைப்பட்ட தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் மண் அகற்றும் பணிகள் தற்போது முழுமையாக நிறைவடைந்துள்ளன.

எனினும், மற்றொரு இடத்தில் மண் சரிவு ஏற்படும் அபாயம் உள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் பணிப்பாளர் ஆர்.டி.கஹடபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன் நிலைமையை சரிபார்த்த பின்னரே வீதியை திறப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேசியக் கட்டட ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் மேற்கொண்ட பரிசோதனையின் பின்னர் வழங்கப்படும் பரிந்துரைகளின் அடிப்படையில் அந்த நெடுஞ்சாலைப் போக்குவரத்துக்காகத் திறக்கப்படும் என வீதி அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

# தடை செய்யப்பட்ட பொலித்தீனை வைத்திருந்த 14 கடை உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு

## மத்திய சுற்றாடல் அதிகார சபையின் யாழ் பிரிவு தகவல்



தடை செய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருள்களை உடைமையில் வைத்திருந்த 14 கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பிரதிப் பணிப்பாளர் சுபோகரன் தெரிவித்துள்ளார்.

அதன்படி, யாழ்.மாவட்டத்தில் கடந்த ஒன்பது மாத கால பகுதிகளில் 13 தடவைகள் விசேட சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த சோதனை நடவடிக்கைகளின் போது உணவகங்கள் , விற்பனை நிலையங்கள் என 205 வர்த்தக நிலையங்களில் சோதனையிடப்பட்டுள்ளன.

அவற்றில் 14 உரிமையாளர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் அந்த வழக்குகள் தற்போது நிலுவையில் உள்ளன.

எதிர்வரும் காலங்களிலும் திடீர் சோதனைநடவடிக்கைகளைமுன்னெடுக்கப்படவுள்ளன.

எனவே வர்த்தகர்கள் தடை செய்யப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் என்பவற்றை விற்பனை செய்யவோ, பயன்படுத்தவோ உடைமையில் வைத்திருக்கவோ வேண்டாம் அறிவுறுத்தப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொலிஸ்மா அதிபரின் பதவிக்காலம் மேலும் மூன்று வாரங்களுக்கு நீடிப்பு?

அரசமைப்பில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் சி.டி.விக்கிரமரத்னவின் பொலிஸ்மா அதிபர் பதவிக்காலம் மேலும் மூன்று வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது என்று உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன.

சி.டி.விக்கிரமரத்னவின் பதவிக்காலம் இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் தலா 3 மாதங்கள் என்ற அடிப்படையில் நீடிக்கப்பட்டது. இதனை அரசமைப்பு சபையும் அங்கீகரித்திருந்தது.

இந்நிலையில், புதிய பொலிஸ்மா அதிபர் ஒருவர் நியமிக்கப்படும்வரை சி.டி.விக்கிரமரத்னவின் பதவிக்காலம் 3 வார காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அரசமைப்பு சபையின் ஒப்புதல் தேவையில்லை எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



# நாகை - காங்கேசன்துறை இடையில் பயணிகள் கப்பல் சேவை இன்று முதல்

## இந்திய மத்திய அமைச்சர்கள் ஜெயசங்கர், சர்வானந்த சோனாவால் காணொலி காட்சி மூலம் இன்று கொடியசைத்து தொடக்கி வைப்பர்





**(திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது)**

நாகை – காங்கேசன் இடையேயான பயணிகள் கப்பல் போக்குவரத்து இன்று தொடங்குகிறது என்று அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.

பயணிகள் கப்பல் போக்குவரத்தை இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் மற்றும் துறைமுகங்கள், கப்பல் நீர்வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் ஆகியோர் சனிக்கிழமை கொடியசைத்துத் தொடக்கி வைக்கிறார்கள்.

நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன் துறைமுகத்துக்கு கடந்த 10 ஆம் திகதி முதல் பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்குவதாக அறிவிக்கப்பட்டது. இதற்காக கேரள மாநிலம் கொச்சினில் உருவாக்கப்பட்ட "செரியபாணி" என்ற பெயர் கொண்ட பயணிகள் கப்பல், நாகை துறைமுகத்திற்கு கடந்த 7 ஆம் திகதி வந்தது. இந்தக் கப்பல் சோதனை ஓட்டம் 8 ஆம் திகதி நடந்தது. இலங்கை காங்கேசன் துறைமுகத்துக்கு சென்ற கப்பல், அங்கிருந்து புறப்பட்டு நாகை திரும்பி வந்தது. இந்த கப்பலில் பயணிக்க, பயணிகளுக்கான கட்டணம் 18 சதவீத ஜி.எஸ்.டி. வரியுடன் ரூ.6,500 (இந்திய நாணயத்தில்) என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கப்பலில் பயணிகள் 50 கிலோ எடை வரை எந்தவிதக் கட்டணங்களும் இல்லாமல் தங்கள் உடைமைகளைக் கொண்டு செல்லலாம். இந்த பயணத்துக்கு பாஸ்போர்ட், இ விசா கட்டாயமாக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டது. நாகை துறைமுகத்தில் இருந்து காங்கேசன் துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து ஒக்டோபர் 10 ஆம் திகதி தொடங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. ஆனால் பல்வேறு காரணங்களால் இந்த நிகழ்வு இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் நிர்வாக காரணங்களினால் கப்பல் போக்குவரத்து தள்ளிவைக்கப்பட்டு இருந்த நிலையில், நாகையில் இருந்து இலங்கைக்கு கப்பல் போக்குவரத்து இன்று (சனிக்கிழமை) தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, பிரதமர் நரேந்திர மோடி காணொலி வாயிலாக வாழ்த்து செய்தி கூறவுள்ளார். கப்பல் போக்குவரத்து தொடக்க விழாவில் நேரடியாக பங்கேற்கும் தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு சிறப்புரையாற்றவுள்ளார்.

இந்த நிலையில் இன்று சனிக்கிழமைகாலை 8.15 மணிக்குகாங்கேசன் துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடங்குகிறது. மத்திய வெளியுறவுதுறை அமைச்சர் ஜெயசங்கர், மத்திய கப்பல் நீர்வழிப் போக்குவரத்து துறை அமைச்சர் சர்வானந்த சோனாவால் ஆகியோர் காணொலிக் காட்சி மூலம் கொடியசைத்து கப்பல் போக்குவரத்தைத் தொடங்கி வைக்கிறார்கள்.

பயணிகள் முனையத்தில் குடியுரிமை, சுங்கத்துறை ஆகிய பிரிவுகளின் சார்பில் சோதனை செய்யும் கருவி உள்ளிட்டவை தயார் நிலையில் உள்ளன. முதல் நாள் மட்டும் கட்டண சலுகையாக நாகை – காங்கேசன் துறை பயணிகள் கப்பல் போக்குவரத்து தொடக்க தினமான சனிக்கிழமை (அக்டோபர் 14) மட்டும் கட்டண சலுகை அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு முறை கட்டணமாக ரூ. 2,800 மட்டும் (வரிகள் உள்பட) வசூலிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

35 பயணிகள் இலங்கை செல்ல முன்பதிவு செய்துள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 14.10.2023




இன்றைய நாள் சிறப்பான நாள். நீங்கள் உங்கள் செயல்களை குறித்த நேரத் திற்குள்ளோ அல்லது அதற்கு முன்போ முடிப்பீர்கள். உங்கள் புத்திசாலித்தனத்தை மேம்படுத்த நீங்கள் சாதகமான நடவடிக் கைகளை எடுக்க வேண்டும்.

பணியிடத்தில் உங்களுக்குள் மறைந்திருக்கும் திறமைகளை பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் திருப்தி கிடைக்கும், தரமான பணிகளை குறித்த நேரத்தில் முடித்துக் கொடுக்க இயலும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர் கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல புரிந் துணர்வு ஏற்படும்.

புதிய முதலீடுகளில் பங்கேற்பது போன்ற முக்கிய முடிவுகளை இன்று நீங்கள் எடுக்கலாம். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.




நீங்கள் இன்று வெளியிடங்களுக்கு செல்வீர்கள். அது உங்களுக்கு உதவியாக வும் ஆறுதலாகவும் இருக்கும். யதார்த்த மான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது. யோகா அல்லது தியானம் மூலம் அமைதியைப் பெறலாம்.

நீங்கள் இன்று கவனத்துடன் பணியாற்றுவீர்கள். உங்களை மேம்படுத்திக் கொள்ளும் வகையில் பணி யாற்றுவீர்கள். இதனால் பணியில் தவறுகள் ஏற்படுவது குறையும்.

உங்கள் துணையுடன் பேசும்போது கவனமாக பேச வேண்டும். எண்ணங்களில் தெளிவும் அதனை பேச்சில் வெளிப்படுத்துவதும் உறவில் நல்லிணக்கத்தை மேம் படுத்தும்.

இன்று அதிகம் செலவாக வாய்ப்புள்ளதால் பண விஷ யத்தில் கவனம் தேவை.




இன்று பலன்கள் கலந்து காணப்படும். இன்று மனதில் தெளிவு வேண்டும். வருவதை எதிர்கொள்ளுங்கள். ஆன்மீக நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஆறுதல் அளிக்கும்.

இன்று வேலைகள் கூடுதலாக இருந் தாலும் நீங்கள் சமார்த்தியமாக செயல்படுவீர்கள். பணி களை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். இன்று சிறப்பான நாளாக இருக்கும்.

இன்று சிறிது உணர்ச்சிவசப்படுவீர்கள். யதார்த்தமான அணுகுமுறை தேவை. உங்கள் துணையுடன் சிறப்பாக தொடர்பு கொள்வதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணத்தை எவ்வாறு கையாள்வதென்று அறிந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் செலவை கட்டுப்படுத்தி சேமிப்பை அதிகரிக்க இயலும்.




இன்று தியானம் அல்லது பிரார்த் தனை மேற்கொள்வது மிகவும் அவசியம். அதன் மூலம் எதிர்மறை எண்ணங்களை தவிர்க்கலாம்.மேலும் மனதில் உள்ள தேவையற்ற எண்ணங்களை நீக்கி அமைதி பெறலாம்.

நேர மேலாண்மை திறன் மூலம் இன்று வெற்றி காண்பீர்கள். சிறப்பாக திட்டமிட்டால் இன்று அனைத்தும் உங்களுக்கு சாதகமாக இருக்கும். வேலை அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள்.

உங்கள் இருவரிடையே நல்ல பிணைப்பு ஏற்பட உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத் திக் கொள்ள வேண்டும். பேசும் போது உங்கள் வார்த் தைகளில் கவனம் தேவை.

இன்று பண வரவு அதிகமாக இருக்காது. என்றாலும் பணத்தை சிறப்பாக கையாண்டால் தேவையற்ற செலவு களை கட்டுப்படுத்த இயலும்.




இன்று முன்னேற்றகரமான நாளாக இருக்கும். முறையாக திட்டமிடுவதன் மூலம் வளர்ச்சி காணலாம். இன்று ஆற்றலும் உறுதியும் உங்களிடம் நிறைந்திருக்கும். நீங்கள் முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

இன்று உங்கள் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். உங்களிடம் நம்பிக்கையான அணுகுமுறை காணப்படும். அது உங்கள் பணியில் வெளிப்படும்.

நீங்களும் உங்கள் துணையும் இன்று மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். அன்பின் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

பணம் சம்பாதிக்கும் திறமை மேம்படும். இதன் மூலம் சுதந்திரமான நிதி நிலைமையும் சுய சார்பும் காணலாம்.

இன்று உங்களிடம் நேர்மறை எண்ணம் காணப்படும்.




இன்று ஆன்மீக ஈடுபாடு சிறந்த பல னைத் தரும். யோகா மற்றும் தியானம் மூலமும் பலன் பெறலாம். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று பணிகள அதிகம் இருப்ப தாக உணர்வீர்கள். சிறந்த யுக்திகளைக் கையாண்டு கவனமுடன் பணியாற்றினால் இன்றைய செயல்களை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ள முடியும்.

உங்கள் துணையுடன் பேசும் போது வார்த்தையில் கவனம் தேவை. உங்கள் துணையுடன் ஒத்துப்போவ தும் அவரை மகிழ்ச்சியாக வைத்திருப்பதும் அவசியம். புரிந்துணர்வு மிகவும் அவசியம்.

இன்று செலவுகள் அதிகமாக இருக்கும். செலவு களை முடிந்த அளவில் கட்டுப்படுத்தி கையிலிருக்கும் பணத்தில் சமாளிப்பது சிறந்தது.




உங்கள் இலக்குகளை அடைவதில் தடைகள் காணப்பட்டாலும் உங்கள் மன தைரியம் மற்றும் உறுதி மூலம் வெற்றி பெறுவீர்கள். பாதைகள் கடினமாக இருந்தாலும் பலன்கள் உங்களுக்கு சாதகமாக இருக்கும். அமைதியாக இருங்கள். வெற்றி நிச்சயம்.

உங்கள் கடின உழைப்பு இன்று உங்களை வெற்றி பெற்ற மனிதனாக்கும். அதிர்ஷ்டத்தை நம்பாமல் உழைப்பை நம்புங்கள். இன்று வேலை அதிகமாக காணப்படும். அதனை நீங்கள் சிறப்பான திட்டத்துடனும் உறுதியுடனும் எதிர்கொள்வீர்கள்.

உறவின் மதிப்பை உங்கள் துணை அறிந்து கொள்ளவும் இருவரும் அவரவர் பொறுப்பை உணர்ந்து கொள்ளவும் சில முக்கியமான விஷயத்தைப்பற்றி இன்று உங்கள் துணையுடன் பேச வேண்டியது அவசியம்.




இன்று உங்களிடம் ஆன்மீக விழிப் புணர்வு காணப்படும். இதன் மூலம் அமைதியும் உங்கள் எண்ணத்தில் தெளிவும் காணப்படும். உங்கள் வெற் றிக்கு இதுவே முதல் காரணமாக அமை யும். இன்றைய நாளை சிறப்பாக் குங்கள். உணர்ச்சிகளை கட்டுப்படுத்த முயலுங்கள்.

அன்றாடப்பணிகளைக்கூட இன்று கவனமுடன்கையாள வேண்டும். பணிகள் சிறிது அதிகமாக இருக்கும் என்பதால் நீங்கள் சிறிது பதட்டத்துடன் காணப்படுவீர்கள். பதட்டப் படாமல் அமைதியாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் மனதில் உள்ள தேவையற்ற தடைகளை நீக்கி உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேச வேண்டும். எதைப் பற்றியாவது தெரியப்படுத்த வேண்டியிருந்தால் மனம் திறந்து பேச வேண்டும். இதனால் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -14.10.2023




இறை வழிபாடும் ஆன்மீக ஈடுபாடும் இன்று உங்களுக்கு வரமாக அமையும். சுய முன்னேற்றத்திற்கான பாதையில் செல்லுங்கள். உங்களுக்கு மாற்றங்கள் ஏற்படும். நீங்கள் விரும்பியதைஅடைய தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

இன்று மிகவும் முன்னேற்றகரமான நாள். இன்று புதிய பணிகளுக்கான வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

உங்கள் இருவரிடையே புரிந்துணர்வு காணப்படும். குடும்ப விருந்து விசேஷங்களில் கலந்து கொள்வ தன் மூலம் இன்றைய நாள் மறக்க முடியாத நாளாக இருக்கும்.

இன்று நிதிநிலைமை வளர்ச்சிகரமாக இருக்கும். இன்று உங்களிடம் அதிக பணம் காணப்படும்.




உங்களைச் சுற்றியுள்ளவர்களோடு ஒத்துச் செல்லுங்கள். இன்று ஏழை மற்றும் தேவைப்படுவோருக்கு உணவு அல்லது பணம் அளியுங்கள். இன்றைய நாளை கழிக்க ஏதாவது ஒரு பொழுது போக்கு விஷயங்களில் ஈடுபடுங்கள்.

பணியிடத்தில் உங்கள் பொறுமை சோதனைக்குள்ளா கும். அமைதியாக பணிகளை மேற்கொள்ளுங்கள்.இதன் மூலம் பிறரின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் இருவரிடையே எந்தவிதமான அகந்தைப் பிரச்சினையும் வரவிடாதீர்கள். உங்கள் துணையை புரிந்து கொள்ள முயலுங்கள். அவருக்கு ஆதரவு அளியுங்கள். இதன் மூலம் இருவரிடையே உறவுப் பிணைப்பு வலுப்படும்.

இன்று பணத்தை சேமிக்க வேண்டியது முதன்மை யானது. கவலையற்ற எதிர்காலத்திற்கு பணத்தை கையாளும் திறமை தேவை.




இன்று மிகவும் உற்சாகமான மகிழ்ச்சியான நாள். இன்று உங்கள் மனதில் திருப்தி நிறைந்திருக்கும்.

பணியிடச் சூழல் இனிமையாக இருக்கும். புதிய வாய்ப்புகள் மகிழ்ச் சியை அளிக்கும். உங்கள் மகிழ்ச்சி காரணமாக நீங்கள் பல மடங்கு திறனுடன் பணியாற்று வீர்கள்.

உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க விரும்புவீர்கள். அவருக்கு பிடித்தமானதை செய்து இருவரும் ஒன்றாக நேரம் செலவு செய்வீர்கள். இதன் மூலம் உங்கள் வாழ்க்கைத் துணையிடம் அன்பைப் பெருக்க உதவும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்கும். இன்று பணம் அதிகமாக சம்பாதிப்பீர்கள். உங்கள் சம்பாத்தி யமும் சேமிப்பும் இன்று ஏறுமுகமாக இருக்கும்.




நீங்கள் இன்று உணர்ச்சிப்பூர்வ–மான அணுகுமுறை மேற்கொள்வீர் கள். விரைந்து முடிவெடுக்காதீர்கள். சூழ்நிலைக்கு தக்கவாறு நடந்து கொள் ளுங்கள். ஆன்மீகத்தில் நாட்டம் கொள் வதன் மூலம் விஷயங்களை எளிதாகக் கையாளலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருப்பதாக உணர்வீர்கள். அதனை மனதில் கொண்டு வருத்திக்கொள்ளாதீர்கள். விரைவாகவும் எளிதாகவும் பணியாற்றுவதைப் பற்றி சிந்திக்க முயலுங்கள்.

கணவன் மனைவிக்கிடையே புரிந்துணர்வும் அனுசரிப் பும் இருப்பது சிறப்பானது. அவரைப் பற்றிய கணிப்பை குறைத்துக் கொள்வதன் மூலம் உறவை மலரச் செய்யலாம்.

பண விஷயத்தில் பொறுமை தேவை சரியான நேரத் தில் உங்களுக்கு பணம் கிடைக்கும்.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES | 235+ CONDO PROJECTS | 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRALPARK JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotiline : +94 777 546 546
JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா



கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park